IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II , ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Code of Criminal Procedure)

CC NO: 266 /2024

Date : 25.02.2026 PW 2/ LW2

| பெயர் | ஆறுமுகம் | ஆதார் எண் | |
|---|---|---|---|
| தந்தை பெயர் | கலியபெருமாள் | தொழில் | கட்டிடவேலை |
| கிராமம் | ஆரிநத்தம் | வயது | 35 |
| எதிரிகள் 2 முதல் 9 ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

முதல் விசாரணை

நான் ஆரிநத்தம் கிராமத்தில் வசித்து கட்டிட வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். அ.சா.1 தனலட்சுமி எனது மச்சான் மனைவி ஆவார். கடந்த 26.04.2021 அன்று மதியம் 1.30 மணியளவில் ஆரிநத்தம் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் இருந்தபோது எனது மைத்துனர் சுரேஷ் அங்கு இருந்தார். எதிரி கள் ஆனந்தன், செல்வம், இளயபெருமாள், பரமசிவம், சங்கர் ஆகியோர் அங்கு வந்து சுரேஷிடம் உனக்கு நிலம் கிடையாது எனக்கூறி தகராறு செய்தார்கள். எதிரி செல்வம் கம்பியால் சுரேஷின் தலையின் பின்புறத்தில் அடித்தார். எதிரி ஆனந்தன் செங்கல்லால் சுரேஷின் தலையில் அடித்தார். எதிரி இளயபெருமாள் சுரேஷை கல்லால் முதுகில் அடித்தார். எதிரி பரமசிவம் கறுங்கல்லால் சுரேஷை முதுகில் அடித்தார். அப்போது அங்கு இருந்த எனது மனைவியின் அக்கா மகள் ரம்யா 108 ஆம்புலன்சுக்கு போன் செய்து வரவழைத்து சுரேஷை உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

அ.சா.1 உம் எதிரிகளும் உறவினர்களா என்றால் இல்லை. எனது மாமனார் மணிக்கும் எதிரி 1 சக்கரை குடும்பத்தினருக்கும் நிலம் சம்மந்தமான பிரச்சனை உண்டு என்று சொன்னால் சரிதான். சம்பவத்தின் போது எனது மாமனார் மணி VAO அலுவலகத்தில் இருந்தாரா என்றால் இருந்தார். நான் சம்பவ இடத்திற்கு சம்பவத்தைப்பற்றி கேள்விப்பட்டுதான் வந்தேன். எனது வீடு சம்பவ இடத்தின் அருகே உள்ளது. எனக்கு தகவல் யார் கூறியது என்றால் ஒரு நபர் சம்பவத்தை பார்த்துவிட்டு என்னிடம் கூறினார். அவரது பெயர் எனக்கு

தெரியாது. சம்பவத்தின்போது எங்கள் தரப்பில் சம்பவ இடத்தில் யாரெல்லாம் இருந்தோம் என்றால் எனது மனைவி அனிதா, மணி , சுரேஷ், தனலட்சுமி, ரம்யா மற்றும் நானும் இருந்தோம். நிலம் சம்மந்தமான பிரச்சனை பற்றி VAO அலுவலகம் முன்னர் யார் பேசிக்கொண்டிருந்தார்கள் என்றால் மணியும், சுரேஷ்-உம் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது VAO அலுவலகம் மூடியிருந்ததா என்றால் இல்லை அலுவலகம் திறந்திருந்தது. சம்பவ இடத்தை சுற்றி வீடுகள் உள்ளதா என்றால், அருகில் ஒரு வீடு மட்டும் உள்ளது. சேந்தமங்கலம் ரோடானது பொதுமக்கள் நடமாட்டம் நிறைந்த ரோடு என்று சொன்னால் அது சரிதான். பிரச்சனை நடைபெற்றபோது எங்கள் இரு தரப்பினரையும் பொதுமக்கள் யாரும் சண்டையை பார்த்து விலக்கிவிடவில்லை என்று சொன்னால் அது சரிதான். நாங்கள் இருதரப்பினர் மட்டும்தான் சண்டை போட்டுக்கொண்டோம். உளுந்தூர்பேட்டை மருத்துவமனைக்கு யார்யார் எத்தனை மணிக்கு சிகிச்சைக்காக சேர்ந்தோம் என்றால் சுரேஷ் மதியம் 2.00 மணிக்கு மருத்துவமனைக்கு சென்றார். பின்னர் மணி மதியம் 3.00 மணிக்கு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தார். பின்னர் அனிதாவும், நானும் மாலை 4.00 மணியளவில் மருத்துமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம். சம்பவம் தொடர்பாக காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தது என்றால் மணியும், சுரேசும் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார்கள். எதிரிகள் என் மீதும், மணி, சுரேஷ், அனிதா, தனலட்சுமி ஆகியோர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அந்த வழக்கிற்காக நாங்கள் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகிரோம் என்று சொன்னால் அது சரிதான். எதிரிகள் VAO அலுவலகத்திற்கு முன்னர் நின்று பேசிக்கொண்டிருந்தபோது நானும், எனது தரப்பினரும் எதிரிகளை கும்பலாக சென்று தாக்கிவிட்டு அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக எதிரிகளுக்கு எதிராக பொய்யான புகார் கொடுக்கப்பட்டு அதற்கு அனுசரணையாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. எதிரிகள் எங்கள் தரப்பினரை அடிக்கவில்லை என்று சொன்னாலோ நான் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலோ அது சரியல்ல. நான் எனது மாமனார் மணிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>- இல்லை**

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Sd- Thiru.R.P.Ajieth Singh Raaja
Judicial Magistrate-II,
Ulundurpet.

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II , ULUNDURPET

### DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Code of Criminal Procedure)

### CC NO: 266 /2024

**Date** : 25.02.2026 **PW 3/ LW4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அனிதா | ஆதார் எண் | |
| கணவர் பெயர் | ஆறுமுகம் | தொழில் | கூலிவேலை |
| கிராமம் | ஆரிநத்தம் | வயது | 34 |
| எதிரிகள் 2 முதல் 9 ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் ஆரிநத்தம் கிராமத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எங்களது உறவினர்கள். அ.சா.1 தனலட்சுமி எனது அண்ணி ஆவார். கடந்த 26.04.2021 அன்று மதியம் 1.30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது, எனது வீட்டில் இருந்து ஐந்து வீடுகள் அடுத்து ஆரிநத்தம் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் உள்ளது. அங்கு எனது தந்தை மணியை எதிரிகள் அடிப்பதாக கிராம மக்கள் என்னிடம் வந்து கூறினார்கள். நான் அங்கு சென்றபோது, எனது தந்தை மணியை ஆனந்தன் இரும்பு ராடால் எனது தந்தையின் தலையில் அடித்தார். எதிரி இளயபெருமாள் செங்கல்லால் முதுகில் அடித்தார். எதிரி பரமசிவம் கல்லால் எனது தந்தையின் முதுகில் அடித்தார். சண்டையை மறிக்க வந்த எனது அண்ணி தனலட்சுமியை எதிரி பூபதி காலால் எட்டி உதைத்தார். எதிரி சகுந்தலா "ஏய் தேவிடியா உன்ன ஒழிக்காம் உடமாட்டேன்" என்று ஆபாசமாக திட்டினார். எதிரி ரீனா தனலட்சுமியை தொடையில் அடித்தார். எதிரிகள் அனைவரும் எனது தந்தையை அடித்ததில் எனது தந்தை மணி மயக்கமடைந்து கீழே விழுந்துவிட்டார். சம்பவத்தை கேள்விப்பட்டு எனது அக்கா மகள் ரம்யா 108 ஆம்புலன்சை வரவழைத்து உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது அப்பா மணிக்கும் எதிரி 1 சக்கரை குடும்பத்தினருக்கும் நிலம் சம்மந்தமான பிரச்சனை உண்டு என்று சொன்னால் சரிதான். எனது அப்பா மணியும், எதிரி 1 சக்கரையும் அண்ணன் தம்பி என்று சொன்னால் அது சரிதான். சம்பவ நாளான 26.04.2021 அன்று மதியம் 1.30 மணியளவில் VAO அலுவலகத்தில் எதிரிகள் இருந்தார்களா அல்லது எனது அப்பா மற்றும் எங்களது தரப்பினர்கள் இருந்தார்களா என்றால் இரு தரப்பினருமே நான் செல்லும்போது அங்கு இருந்தனர்.

இருதரப்பினரும் VAO அலுவலகத்திற்கு வெளியேதான் நின்றிருந்தனர் என்று சொன்னால் சரிதான். தகவல் அறிந்து VAO அலுவலகத்திற்கு நானும் எனது கணவர் ஆறுமுகமும் ஒன்றாகதான் சென்றோமா என்றால் இல்லை. நான் முதலில் சென்றேன். ஐந்து நிமிடங்கள் இடைவெளிவிட்டு எனது கணவர் VAO அலுவலகம் வந்தடைந்தார். நான் VAO அலுவலகம் சென்றபோது எங்கள் தரப்பில் அங்கே யாரெல்லாம் இருந்தனர் என்றால் என்னை தவிர்த்து எனது அப்பா மணியும் தனலட்சுமியும் அங்கு இருந்தனர். சுரேஷ் நான் சம்பவ இடம் சென்றபிறகு தான் வந்தார் என்று சொன்னால் சரிதான். சுரேஷ் வந்தபிறகு தான் எனது கணவர் VAO அலுவலகம் வந்தடைந்தார். நாங்கள் இருதரப்பினரும் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டோம் என்று சொன்னால் அது சரியல்ல. எதிரிகள் தான் எங்களை அடித்தனர். அங்கிருந்த பொதுமக்கள் யாரும் சண்டையை தடுக்கவில்லை. மருத்துவமனைக்கு யாரெல்லாம் சென்று சிகிச்சை பெற்றோம் என்றால் 108 ஆம்புலன்ஸ் மூலம் மதியம் 3.00 மணியளவில் எனது அப்பாவை ஏற்றிக்கொண்டு நானும் உடன் மருத்துவமனைக்கு சென்றேன். சண்டை சம்மந்தமாக காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தது என்றால் எனது அண்ணி தனலட்சுமி புகார் கொடுத்தார். எப்போது கொடுத்தார் என்றால் சண்டை நடந்த அன்றே புகார் கொடுத்தார். போலிசார் என்னை எப்போது எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் சம்பவம் நடந்த மறுநாள் என்னை விசாரணை செய்தனர். என்னை மருத்துவமையில் மற்றும் எனது வீட்டிலும் வைத்து விசாரணை செய்தார்கள். எதிரிகள் என் மீதும், ஆறுமுகம், மணி, சுரேஷ், தனலட்சுமி ஆகியோர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அந்த வழக்கிற்காக நாங்கள் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகிரோம் என்று சொன்னால் அது சரிதான். எதிரிகள் VAO அலுவலகத்திற்கு முன்னர் நின்று பேசிக்கொண்டிருந்தபோது நானும், எனது தரப்பினரும் எதிரிகளை கும்பலாக சென்று தாக்கிவிட்டு அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக எதிரிகளுக்கு எதிராக பொய்யான புகார் கொடுக்கப்பட்டு அதற்கு அனுசரணையாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. எதிரிகள் எங்கள் தரப்பினரை அடிக்கவில்லை என்று சொன்னாலோ நான் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலோ அது சரியல்ல. நான் எனது அப்பா மணிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை-</u> இல்லை**

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Sd- Thiru.R.P.Ajieth Singh Raaja
Judicial Magistrate-II,
Ulundurpet.